**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகம் தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிற்குமிடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 7 ஏக்கர் 2 ரூட் 8.41 பேச்சர்ஸ் காணி ரூபா 11,700 மில்லியனுக்கு பெறுமதியிடப்பட்டிருந்தது. அதன் தொடக்க கொடுப்பவாக ரூபா 1,500 மில்லியன் மற்றும் ரூபா 300 மில்லியன் வீதம் 34 ஆண்டுகள் கால எல்லைக்கு தொடர்ச்சியாக பகுதியளவில் செலுத்துவதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதில் ரூபா 2,250 மில்லியன் | கருத்துரைகள் தரப்படவில்லை. | கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செலுத்தப்பட்டிருந்தது.
அதற்கிணங்க புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டியதாக ரூபா 9,450 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதிய அமைப/21/1734/331/009 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டுள்ள ரூபா 2,250 மில்லியன் பணத்திற்கு மேற்கூறிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் காட்டப்படுகின்ற நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமாக இருந்த காணியில் 4 ஏக்கர் 3 ரூட் 24.47 பேச்சர்ஸ் காணி பரப்பளவு மாத்திரம் விற்பனை உறுதியின் மூலம் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதியான 2 ஏக்கர் 02 ரூட் 22.08 பேச்சர்ஸ் காணிப் பரப்பளவானது நன்கொடை பத்திரத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் ஆணைக்குழுவினால் மேலே குறிப்பிட்ட செலுத்த வேண்டிய பணமும் அப்பெறுமதிக்கு சமமான தொகையும் உரிய சொத்தின் பெறுமதியிலிருந்து நீக்கப்பட்டிருந்தது.
எவ்வாறாயினும் தாமரைக் கோபுரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணி இன்றுவரை பயன்படுத்தப்படுவதனால் அவ்வாறு செலுத்த வேண்டிய பொறுப்பும் காணியின் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியில் ஒரு பகுதியும் நீக்கப்பட்டதன் காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் காணியின் நியாயமான பெறுமதி

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 23 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியற்ற அரசாங்கத்தின் மானியமானது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கொழும்பு தாமரைக் கோபுரம் அமைந்துள்ள காணி அன்பளிப்பாக ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்தும் அதன் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இக்காணியை மீள்மதிப்புச் செய்தல் முடிவடைந்திருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 23 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் உண்மையாக கிடைத்த வட்டியும் பங்கிலாபமும் மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கிடைத்த வட்டியும் பங்கிலாபமும் ரூபா 1,150,434,945 தொகை மற்றும் கிடைக்க வேண்டிய வட்டியாகிய ரூபா 241,310,274 தொகையினை உள்ளடக்கி ரூபா 1,341,809,603 முழு வட்டியும் பங்கிலாபமும் காசு உட்பாய்யச்சலாக காட்டப்பட்டு அந்த வித்தியாசமானது (கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 241,310,274) தொழிற்படு மூலதன செம்மையாக்கலின் மூலம் செம்மையாக்கப்பட்டிருந்தது. | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டியாகிய ரூபா 241,310,274 பெறுமதியானது தொழிற்படு மூலதன செம்மையாக்கலினூடாக சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். தயவு செய்து குறிப்பு இலக்கம் 22-1 இற்கு உங்களது கவனத்தை செலுத்தவும். | காசுப்பாய்ச்சலுக்கு இணங்க தேறிய காசு உட்பாய்ச்சல் மாத்திரம் செம்மையாக்கப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இற்கு இணங்க பணமாக செலுத்திய கடன் மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் எஞ்சிம் வங்கி கடனாக ரூபா 1,833,493,891 செலுத்தப்பட்டிருந்தும் அது ரூபா 452,549,828 கடன் கொடுப்பனவாகக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக காசுப் பாய்ச்சல் | இதன் போது எக்சிம் வங்கி கடனுக்காக செலுத்தப்பட்ட கடன் பெறுமதியில் ஒரு தவணைப் பணம் மூலதனாக்கப்படாததனாலும் மிகுதி தவணைப் பணத்தினை செலுத்துதல் தாமதமடைந்ததனாலும் இலாபத்திற்கும் ஐந்தொகை குறிப்புகளுக்கும் | பணமாக மேற்கொண்ட சரியான கொடுப்பனவினை காசு வெளிப் பாய்ச்சலாக காட்டி காசுப்பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,380,944,063 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்க பணமாகச் செலுத்திய கொடுப்பனவின் தேறிய பெறுமதி மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது என தயவாக கவனித்துக் கொள்ளவும். அது இரட்டைப் பதிவுக்கு இணங்க ஆண்டிற்கான இலாபத்திற்கு சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | முன்னைய ஆண்டின் போது திருத்தம் செய்தல்/ பராமரித்தல் செலவாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 625,000 தொகையான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் செலவானது காசுப்பாய்ச்சல் கூற்றில் இலாபத்திற்கு செம்மையாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான காசு வெளிப் பாய்ச்சலாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பிழையினை சரி செய்வதற்காக ரூபா 625,000 பணத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட பதிவானது சரியாக இரட்டைப் பதிவின் மூலம் கணக்கீடு செய்வதனூடாக இலாபத்தினை கணக்கீடு செய்யும் போது சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது. இதன் போது இரட்டைப் பதிவுத் தத்துவத்தின் கீழ் பிழைகளை சரிசெய்யும் பதிவுகளின் மூலம் இலாபம் குறைக்கப்பட்டு நிலையான சொத்துக்கள் அதிகரிக்கப்பட்டிருந்தது. இலாபம் குறைவதினூடாக ஆண்டிற்கான செலவு குறைக்கப்பட்டுள்ளது. பணத்தின் செலவு குறைக்கப்பட்டுள்ளது. பணத்தின் தேறிய தாக்கம் சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் இடம்பெற்ற காசு வெளிப்பாய்ச்சல் மாத்திரம் செம்மையாக்கப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் பணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,900,000,000 முதலீடாக இருந்த | 2022 ஆம் ஆண்டிற்கான முதலீட்டுப் | சரியான காசு வெளிப்பாய்ச்சலினைக் காட்டி காசுப் பாய்ச்சல் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் ரூபா 112,328,477 நாட்குறிப்பின் மூலம் திறைசேரி பிணை முறிகளீல் பெயரளவுப் பெறுமதியினை விட அதிகமாக செலுத்திய பெறுமதியால் மீளாய்வாண்டு தொடர்பான வருமானக் கூற்றில் பதிவழித்த பெறுமதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் இலாபத்திற்கு செம்மையாக்குவதற்குப் பதிலாக ஆண்டின் போது அப்பெறுமதி கழிக்கப்பட்டு ரூபா 2,787,671,522 காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 112,328,477 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பெறுமதிக்கு இணங்க சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இனங்காணப்பட்டது. நிலையான வைப்பு மாத்திரமின்றி ஏனைய முதலீடுகளில் ஆண்டின் போதான வித்தியாசங்கள் சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது என தயவாகத் கருதிக் கொள்ளவும். | கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு பெறுமதி பூச்சியமான ரூபா 1,075,740,531 தொகையான சொத்துக்கள் இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதனால் அந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தொடக்க முயற்சியாக மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் இணைந்து தற்பொழுது அனைத்து காணிகளும் (கதிரானவை தவிர்த்து) மீள்மதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த மீள்மதிப்பினை 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்போம். ஏனைய கட்டிடங்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள் மற்றும் ஏனைய அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பு செய்வதற்கு நிருவாகப் பிரிவு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்து உரிய தொடக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் தாமதம் இதற்கு | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் நியாயப் பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

காரணமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்கான மத்தியஸ்த செலவு ரூபா 296,483,458 ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக ரூபா 44,472,518 தொகையான உரிய பெறுமதி சேர் வரியானது மத்தியஸ்த செலவுக்கு செம்மையாக்கி கணக்கீடு செய்ததன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் ரூபா 44,472,518 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகிறோம். | நிதிக்கூற்றுக்களில் பெறுமதி சேர் வரிப் பொறுப்பினை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 நவம்பர் மாதத்தில் ஆண்டு தொடர்பாக கொழும்பு தாமரைக் கோபுரத்திற்காக செலுத்திய ரூபா 2,454,017 தொகையான காப்புறுதி பணத்தில் ரூபா 409,002 மாத்திரம் அக்கணக்கிற்கு வரவு வைத்து ரூபா 2,045,014 தொகை அடுத்துவரும் ஆண்டிற்காக செய்த கொடுப்பனவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபமும் நடைமுறைச் சொத்துக்களும் ரூபா 2,045,014 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகிறோம். | ஆண்டிற்கான செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஒக்தோபர் மாத்திலிருந்து 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக பதவியணியினரின் ஆயுள் காப்புறுதிக்காகச் செலுத்திய ரூபா 2,975,382 பணம் 2022 ஆம் ஆண்டின் அட்டுறு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2023 ஆம் ஆண்டின் 09 மாதங்கள் தொடர்பான ரூபா 2,231,536 செலவு அட்டுறு செலவாக கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகிறோம். | ஆண்டிற்கான செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சேவை உடன்படிக்கைகளை மீறியதன் காரணமாக உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,878,060 பிணை முறிகளின் பெறுமதியானது கிடைக்க வேண்டிய சம்பளத்திலிருந்து கழித்தல்கள் கணக்கின் ஒரு சொத்தாக காட்டி பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அட்டுறு செலவின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகிறோம். | பிற்போட்ட வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்தல்கள் மற்றும் செலவுகளுக்கான பெறுகை நடைமுறையினுள் காணப்பட்ட மொத்தமாக ரூபா 1,282,800 தொகை நடைமுறை வேலைகள் மற்றும் செலவுகளாக அட்டுறுச் செலவுக் கணக்கில் கணக்கீடு செய்யப்படுவதனால் செலவுகளும் நடைமுறைப்பொறுப்புக்களும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 6 எண்ணிக்கையான KVA UPS களை ரூபா 450,000 இற்கு கொள்வனவு செய்வதற்கும் 01 டொட் மெட்ரிக்ஸ் பிரிண்டரினை ரூபா 160,000 இற்கு கொள்வனவு செய்வதற்கும் 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததனால் இச்செலவுகள் 2022 ஆம் ஆண்டிற்கான அட்டுறு செலவாக கருதப்பட்டது. ரூபா 156,850 தொடர்பான மற்றும் ரூபா 515,950 தொடர்பான ஆணைக்குழுவின் பிரதான கட்டிடத்தின் பராமரிப்பு செலவுகளுக்காக ‘‘சத்மின கொன்ஸ்ட்ரக்சன்’’ நிறுவனத்திற்கு கேள்வியானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்டிருந்ததனால் அது 2022 ஆம் ஆண்டிற்கான அட்டுறு செலவாக கருதப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகள் முடிவடைந்து செலவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தினை உறுதியாக இனங்கண்டு ஆண்டிற்கான செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பெறுமதி சேர் வரி கட்டுபாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 576,381 தொகை அக்கணக்கிற்கு வரவு வைக்கப்படாது ஏனைய வருமான கணக்கிற்கு வரவு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பொறுப்பும் வருமானமும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகிறோம். | கணக்கு வைத்தல் சரியாக செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | பெறுமதி சேர் வரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 2,606,452 பணம் செலவுக் கணக்கிற்கு வரவு வைத்ததன் காணரமாக மீளாய்வாண்டிற்கான செலவும் பொறுப்பும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகிறோம். | கணக்கு வைத்தல் சரியாக செய்யப்படுதல் வேண்டும |
| (ஏ) | கிராமத்திற்கு தொடர்பாடல் செயற்திட்டத்திற்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 487,500 செலவு நானாவித செயற்பாட்டு கிரய கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | இணங்குகிறோம். | கணக்கு வைத்தல் சரியாக செய்யப்படுதல் வேண்டும |
| (ஐ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 3,815,600 தொகையான செஸ் வரி வருமானம் 2023 எப்ரல் 26 ஆந் திகதி கிடைத்திருந்தும் அது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 3,815,600 குறைத்தும் பெறவண்டிய வருமானம் (சொத்துக்கள்) ரூபா 3,815,600 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஆஸ்க் கேபல் விசன் தனியார் கம்பனியால் செலுத்தப்பட்ட செஸ் கட்டணம் ரூபா 3,815,600 பணம் 2023 ஏப்ரல் 26 ஆந் திகதி செலுத்தப்பட்டது. எனினும் 2023 ஏப்ரல் 03 ஆந் திகதியளவில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததனால் நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்வதற்கு இயலுமை இருக்கவில்லை என தயவாகத் தெரிவிக்கிறேன். | ஆண்டிற்கான வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஒ) | கதிரான ஒலி அலை அதிர்வு பரீட்சிப்பு நிலையத்தின் கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே செலுத்தப்பட்ட ரூபா 20,344,564 பணம் மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக அறவிடப்பட்டிருந்த போதிலும் அக்கணக்கில் ரூபா 5,522,503 மீதி இன்னும் | இணங்குகிறோம். | கதிரான முற்பணங்கள் கணக்கின் கணக்கீட்டுக் குறைபாட்டினை சரிசெய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. | | |
| (ஓ) | ரூபா 45,000,000 பெறுமதியான 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேச்சர்ஸ் கதிரான ஒலி அதிர்வு பரீட்சிப்பு நிலையம் அமைந்துள்ள காணியில் அண்ணளவாக 69 சதவீதமான காணிப்பகுதி கடான பிரதேச சபையினால் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் அக்காணியின் உரிமை தொடர்பான சிக்கலினைத் தீர்த்துவைத்து அது தொடர்பான செம்மையாக்கல்கள் மீளாய்வாண்டின் போதும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமை தொடர்பான நடவடிக்கை தீர்த்துவைக்கப்பட்டதன் பின்னர் காணியை மீள்மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | கதிரான ஒலி அலை அதிர்வு பரீட்சிப்பு நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமை தொடர்பான சிக்கல் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |
| (ஔ) | ஹம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவின் தொலைத் தொடர்பு ஊடக நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய காணியை மதிப்பீடு செய்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதிக்கூற்டறுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது அனைத்து காணிகளும் (கதிரானையை தவிர்த்து) மீள்மதிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதியை 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக நிதிக்கூற்றுகளில் காட்டப்படுதல் வேண்டும். |
| (க) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற குறிப்பு இலக்கம் 3.5.1 இல் காட்டப்படும் வருமான வரியினைக் கணிக்கும் பட்டோலையில் மீளாய்வாண்டின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 31,697,157,371 ஆக இருந்த போதிலும் ரூபா 30,135,029,649 இனை அடிப்படையாகக் கொண்டு வருமான வரி கணிக்கப்பட்டிருந்தது. அதன் போது இலாபத்திலிருந்து கழிப்பதற்கு இடமளிக்கக் கூடிய செலவுகளின் கீழ் மிகையூதியக் கொடுப்பனவாக ரூபா 1,720,250 இற்குப் பதிலாக ரூபா 1,055,330 மாத்திரம் கழிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் நாணயமாற்று வீத மாற்றத்தின் அடிப்படையில் உருவாகிய ரூபா 4,565,034,242 தொகையான நாணய பரிமாற்று நட்டம் வருமான வரியினை கணிப்பீடு செய்யும் போது செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை | இணங்குகிறோம். | வருமான வரியினை சரியாக கணிப்பீடு செய்தல் வேண்டும |

.

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வணிகக் கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 373,198,897 பணம் அறவிட வேண்டி இருந்தது. அதனுள் மொத்த கடன் மீதி 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் கடன்பட்டோராக வகைப்படுத்தப்பட்டு 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அக்கடன் மீதியினுள் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் கடன் மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு வாடிக்கையாளரினாலும் மிகையாகச் செலுத்திய பணங்களின் மொத்தம் ரூபா 2,123,490 ஆகும். அப்பணத்தை செம்மையாக்கி நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதி சரியாகக் காட்டப்பட்டுள்ளது. | சரியான காலப்பகுப்பய்வுடன் நிதிக்கூற்றுக்களுக்குரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவின் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க கிராமத்துக்கு தொடர்பாடல் செயற்திட்டத்திற்காக அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 187,645 ஆகும். அச்செலவுகளை இனங்காண்பதற்கான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது உரிய அனைத்து வவுச்சர்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டின் போதும் அத்தகவல்கள்/ வவுச்சர்களை சமர்ப்பிக்க முடியும் என தயவாக தெரிவிக்கிறேன். | முன்னைய ஆண்டிற்கான தகவல்களை மீளாய்வாண்டின் போதும் கணக்காய்வினால் வேண்டப்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தகவல்களை கணக்காய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கைகளை அனுப்புவதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) முழுக்கடன்பட்டோர்களில் 46 சதவீதத்திற்கு மேற்பட்டவைகள் ஒரு தனியார் கம்பனியின் பெயரில் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அப்பணம் ரூபா 174,800,000 ஆகும். 2007 ஆம் ஆண்டில் ரூபா 172,500,000 தொகையும் 1993 ஆம் ஆண்டில் ரூபா 2,300,000 தொகையுமாக | இணங்குகிறோம். | அறவிட வேண்டிய கடன் பணத்தை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவாகியிருந்த இந்த நிலுவைக்கடன் மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்காதததுடன் அறவீடு செய்வதற்கு ஆக்கூபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | முழுக்கடன்பட்டோர் மீதியில் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவானவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அப்பணம் ரூபா145,254,449 ஆகும். அக்கடன் மீதி 1976 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலுவைக்கடன் மீதி உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் அறவீடு செய்வதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறோம். | அறவிட வேண்டிய கடன் பணத்தை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | கடன்பட்டோர் மீதியினுள் மிகையாக அறவிடப்பட்ட 544 மறைக்கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,171,741 தொகையினை தீர்த்துவைப்பதற்கு 2022 திசெம்ர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கடன் மீதியினுள் ரூபா 100 இற்கு குறைந்த கடன் மீதிகளின் எண்ணிக்கை 415 ஆகும். இக்கடன் மீதிகளை செம்மையாக்குவதற்காக ஆணைக்குழுவினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனைத் தீர்த்துவைப்பதற்கான இயலுமை இல்லை 2015 ஆம் ஆண்டிலிருந்து உரிய பணத்தினை விட மிகையாகச் செலுத்திய சந்தர்ப்பங்கள் இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டதுடன் இப்பணத்தை வருமானத்திற்கு செம்மையாக்குவதற்கு அல்லது ஏனைய மாற்றுவழிகளுக்காக பயன்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். | மறைக்கடன் மீதிகள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கடன் மீதிகளில் ரூபா 344,832,696 பெறுமதியான 104 மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் 03 மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் | ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு சேவைக்குமாக புள்ளவிபர முகாமைத்துவ பிரிவு மற்றும் நிதிப்பிரிவு தனித்தனியாக சேவைகளைப் பேணி வந்திருந்ததனால் தனித்தனியாக | அறிக்கையின் பந்தி தொடர்பாக பதில் அனுப்பிவைக்கப்பட வேண்டியதுடன் கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரம் கிடைத்திருந்தது. ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31இல் உள்ளவாறு ரூபா 12,604,641 பெறுமதியான 1,057 கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | கடிதங்கள் அனுப்பப்படுகின்றன என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (உ) | ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலம் தொடர்பாக கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு குத்தகை வருமானம் ரூபா 6,358,657 தொகையினை அறவீடு செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத தொலைத் தொடர்பு குத்தகையினை அறவீடு செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு இணங்க சட்டப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது. | நிலுவையான வருமானத்தினை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஒரு நிறுவனத்திடமிருந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலம் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட செஸ் வரி வருமானம் தொடர்பான பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரிப் பணமாகிய ரூபா 3,411,488 தொகையினை அறவீடு செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே ஒரு தனியார் கம்பனியிடமிருந்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகள் தொடர்பாக அறவிட வேண்டிய செஸ்வரி வருமானமாகிய ரூபா 254,135 இனை அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய ரூபா 3,411,488 ஆன செஸ்வரி மீதியினை அறவீடு செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு இணங்க சட்டப் பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவையாக உள்ள வருமானத்தினை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் லோங்டன் பிளேஸ் கட்டிடத்தினை குத்தகைக்கு | திருத்தம் செய்வது சம்பந்தமாக | ஆணைக்குழுவிற்கு சாதகமற்ற |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளும் போது கட்டிடத்தின் உரிமையாளருடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் h பிரிவின் பிரகாரம் உரிய குத்தகை கால எல்லைக்குள் உடன்படிக்கையினை முடிவுறுத்த முடியாது எனவும் உரிய கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் குத்தகை உடன்படிக்கை முடிவுறுத்தப்படுமாகவிருந்தால் மிகுதிக் காலப்பகுதிக்காகவும் குத்தகை செலுத்த வேண்டுமென காட்டப்பட்டிருந்தது. குத்தகை காலம் மிகைப்பதற்கு முன்னர் ஆணைக்குழுவினால் கட்டிடத்தினை மீள ஒப்படைத்திருந்ததன் காரணமாக குத்தகைக்கு பெற்றுக்கொள்ளும் போது செலுத்திய ரூபா 1,350,000 வைப்பு பணத்திற்கு மேலதிகமாக உடன்படிக்கைக்கு இணங்க செலுத்த வேண்டிய மிகுதி கட்டிட வாடகை மற்றும் உரிமையாரினால் தெரியப்படுத்திய சேதங்களுக்காக இன்னும் ஆணைக்குழுவினால் கட்டிட உரிமையாளருக்கு ரூபா 960,250 செலுத்த வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடானது உடன்படிக்கையின் XXIX ஆம் பிரிவிற்கு இணங்க பட்டயம் பெற்ற மனை வடிவமைப்பு நிபுணரினால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும். அதற்கிணங்க மீண்டும் செலுத்த வேண்டிய பணம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். | நிபந்தனைகளை உள்ளடக்கியுள்ள லோங்டன் பிளேஸ் கட்டிடத்தின் உடன்படிக்கையினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உரிமையாளரினால் தெரியப்படுத்தியுள்ள நட்டங்கள் சேதங்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 505,355 தொகையானது தீர்த்து வைக்கப்படாத கொள்வனவு முற்பண மீதியாகும். 2002 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டு வரை முன்னாள் தலைவரினால் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 116,000 முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது எந்த செயற்பாடுகளுக்காக என்பது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10 ஆண்டுகளுக்கும் 11 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தும் அவற்றினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர் ஆணைக்குழு அங்கத்தவர் அல்லாததனால் தனிப்பட்ட கோவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை உரிய காலஎல்லைக்குள் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 20(2) (இ), 21(2)(ஆ) மற்றும் 22(2)(அ) ஆம் பிரிவுகள் | ஏதாவது ஒரு கட்டணத்தை செலுத்துகையில் மாத்திரம் சேவைகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் சேவைகளை வழங்கியமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 373,198,897 பணம் அறவிட வேண்டி இருந்தது. | சேவைகளை வழங்குவதற்கு முன்னர் வரி இன்வொயிஸ் பத்திரங்கள் வழங்கப்படுவதனால் அறவிட வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 21(1)(ஆ), 26(1) ஆம் பிரிவுகள் மற்றும் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டிகள். | மீளாய்வாண்டிற்கான பெறுமதி செர் வரி கட்டுப்பாட்டு கணக்கிற்கு இணங்க செலுத்திய வரிப் பெறுமதி ரூபா 1,785,458,237 ஆகும். எனினும் ரூபா 40,952,958 பணம் இன்னும் செலுத்த வேண்டி இருந்தது. | சரியாக ஆண்டிற்கான அனைத்து பெறுமதி சேர் வரியும் செலுத்தப்பட்டுள்ளது. | பெறுமதி சேர் வரிக் கணக்கில் ரூபா 40,952,958 மீதி காணப்படுவதனால் வரி அதிகாரச் சட்டத்தின் 21(1)(ஆ), 26(1) பிரிவுகள் மற்றும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| | (i) II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் ஆணைக்குழுவினால் | நியமன விதி தொகுதியை உள்ளடக்கும் விடயங்கள் | நியமன விதி தொகுதிக்காக முகாமைத்துவ சேவைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 07 பதவிகளுக்காக நீண்டகாலம் பதில் கடமை பார்க்கும் நியனம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் கால விச்சு 02 ஆண்டிலிருந்து 15 ஆண்டுகள் வரை பரந்திருந்தன. 07 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமை பார்ப்பதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை பதில் கடமை பார்க்கும் படியாக ரூபா 19,647,854 செலுத்தப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 7,075,398 செலுத்தப்பட்டிருந்தது. | சம்பந்தமாக தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளைத் தொடர்புபடுத்துதல் எனது 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து முடிவடைகின்றது என அந்த விதியினை அறிமுகப்படுத்தும் போது ஆணைக்குழு தீர்மானத்திருந்தது. இந்த பதில் கடமை பார்க்கும் நியமனத்தை வழங்குதலானது மேற்கூறிய விதித் தொகுதியின் ஏற்பாட்டுடன் இணங்கியுள்ளது. | திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பதில் கடமைபார்க்கும் நியமனம் வழங்கியுள்ள பதவிகள் அத்தியவசியமற்றதாகவிருந்ததால் பதவிகளின் எண்ணிக்கையை திருத்தம் செய்தல் வேண்டும். |
| (ii) | XII ஆம் அத்தியாயத்தின் 16.5 ஆம் பிரிவு | ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 செப்தெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து 2015 செப்தெம்பர் 08 ஆந் திகதி வரை வெளிநாட்டு தொழிலுக்காக செல்வதற்கு சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டிருந்த ஒரு உத்தியோகத்தர் 2015 செப்தெம்ர் 09 ஆந் திகதியிலிருந்து சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை. அத்திகதியிலிருந்து 2022 பெப்ரவரி 09 ஆந் திகதி வரை 07 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும ரூபா 1,878,060 பிணை முறிப்பெறுமதியை மீளச் செலுத்துமாறு அவருக்கு | 2015 செப்தெம்பர் 09 ஆந் திகதி மீண்டும் ஆணைக்குழுவில் சேவைக்கு சமூகமளிக்க வேண்டிய போதிலும் சமூகமளித்திருக்கவில்லை. உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய தண்டப்பணம் சம்பந்தமாக 2022 ஆம் ஆண்டில் ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் வசிப்பிடத்தை விட்டுச்சென்றுள்ளார் என தெரிவித்து அக்கடிதம் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2022 மார்ச் 14 ஆந் திகதி நீர்கொழும்பு | தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆணைக்குழுவினால் ஒரு கடிதத்தின் மூலமேனும் தெரியப்படுத்தியிருக்கவில்லை. அதன் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 1,878,060 பணம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகத்திற்கு நிரந்தர வசிப்பிடத்தின் விலாசத்தினை உறுதிப்படுத்தி அனுப்புமாறு தெரியப்படுத்தியிருந்தும் பதில் கிடைக்கவில்லை. அதற்கான ஞாபகப்படுத்தல் 2022 மே 04 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 138 | ஏற்பாடுகளுக்கு முரணாக 03 பெயரளவிலான இன்வொயிஸ்களை அடிப்படையாகக் கொண்டு 03 வவுச்சர்களுக்கு ரூபா 1,075,000 செலுத்தப்பட்டிருந்தது. | பின்னைய சந்தர்ப்பங்களிர் அச்செலவுகள் மீண்டும் இடம்பெறவில்லை என உறுதிப்படுத்துகின்றோம். மேலும் இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் இடம்பெறாமைக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | நிதிப்பிரமாணம் 261 (3) | மக்கள் வங்கி மீதியினை உறுதிப்படுத்தும் கடிதத்திற்கு இணங்க ரூபா 436,243,821 மீதி காணப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க அந்த மீதி ரூபா 234,834,591 மறை மீதியாகும் அந்த வங்கி கணக்கு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க | 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மக்கள் வங்கி கணக்கின் உரிய மீதி ரூபா 933,237,468 மறைப் பெறுமதியை கொண்டிருப்பதற்கான காரணம் தாமரைக் கோபுரத்தின் கடன் தவணைப் பணம் - டொலர் 4,919,373 (ரூபா | நிதிப்பிரமாணம் 261 (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூற்றிற்கு இணங்க இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 260,619,617 ஆகும். மேற்கூறிய வங்கி கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 933,237,468 மறை மீதியாக காணப்பட்டிருந்தும் நிதிப்பிரமாணத்திற்கு முரணாக காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யும் அசாதாரண நிலைமை கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாகும். | 1,028,595,896) மற்றும் எல்.எஸ் டெலிகொம் நிறுவனத்திற்கு யூரோ 25,116.75 தொகை (ரூபா 6,292,348) கொடுப்பனவுக்காக வங்கிக்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததனாலாகும். | |
| (iii) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | ஏற்பாடுகளுக்கு முரணாக ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டில் ரூபா 100,000 எல்லையினை மிகைத்து 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,222,168 மொத்த பெறுமதியான கொள்வனவு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட தீவிர எரிபொருள் சிக்கலினை முன்னிட்டு அத்தியவசியமான கடமைகளை மேற்கொள்வதற்காக கடமை வாகனங்களை ஈடுபடுத்தும் போது, நிறுவனத்தின் மின்பிறப்பாக்கி இயந்திரங்களுக்குத் தேவையான எரிபொருட்களை வழங்கும் போது, எரிபொருள் வழங்குனர் கைகாசிற்கு மாத்திரம் எரிபொருள் வழங்கப்படும் என எழுத்துமூலம் தெரியப்படுத்தியதனால் இவ்வாறு காசு முற்பணங்களின் மூலம் எரிபொருட்களை கொள்வனவு செய்தல் இடம்பெற்றது. இதன் போது | உரிய சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆணைக்குழுவின் காசு முற்பணங்களுக்கான சுற்றறிக்கைக்கு இணங்க ரூபா 100,000 இற்கு மேற்பட்ட காசு முற்பணங்கள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கிகரத்தின் அடிப்படையில் இடம்பெற்றது. | |
| (iv) | நிதிப்பிரமாணம் இலக்கம் 1645(ஆ) | ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் 25 வாகனங்களில் 08 வாகனங்களுக்காக 2022 ஆம் ஆண்டின் எந்த மாத்திலும் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 13 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் சில மாதங்கள் தொடர்பாக ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் அந்த அனைத்து ஓட்ட அட்டவணைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 1645(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் இலக்கம் 1646 | ஏற்பாடுகளின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் 08 வாகனங்கள் தொடர்பாக பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் தொடக்க பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத:துவரும் காலங்களில் அந்த அனைத்து ஓட்ட அட்டவணைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதி PED 2022/05 ஆம் இலக்க அரசாங்க வணிக சுற்றறிக்கையின் 3.9 ஆம் பிரிவு | ஆணைக்குழுவில் சேவையாற்றி வந்து மீளாய்வாண்டின் போது வெளிநாடு சென்ற 04 உத்தியோகத்தர்களுக்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஆணைக்குழுவினால் அது தொடர்பாக | இந்த உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை எற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அவ்வாறு நடவடிக்கை | 2022 ஆகஸ்ட் 22 PED 2022/05 ஆம் இலக்க அரசாங்க வணிக சுற்றறிக்கையின் 3.9 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கவில்லையாயின் அவ்வாறான சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக காட்டப்பட்டுள்ள சுற்றறிக்கையின் 3.14 ஆம் பிரிவிற்கு இணங்க சேவைக்கு சமூகமளித்ததன் பின்னர் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 31,697,157,371 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 32,296,276,914 ஆகும். அதற்கிணங்க நிதி வளைவுகளில் ரூபா 599,140,543 வீழ்ச்சி காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஒழுங்குபடுத்தல் செலவு அதிகரித்தல், நிருவாக மற்றும் தாபனச் செலவுகள் அதிகரித்தலும் வெளிநாட்டு நாணய கொக்கல் வாங்கல்களின் நட்டம் அதிகரித்தலும் பிரதான காணரமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

ஆணைக்குழுவின் வருமானங்கள் மற்றும் செலவுகளை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் போது தொலைபேசி குறுந்தகவல் சேவை குத்தகை வருமானம் 42 சதவீதத்தினால் குறைவடைதலானது வருமானம் குறைவடைந்தமை தொடர்பாக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் மொத்த செலவுகள் ரூபா 6,717,470,760 தொகையில் நிருவாக மற்றும் தாபனச் செலவுகளுக்காக ரூபா 1,822,878,544 அல்லது 27 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் பதவியணியினர் சம்பளங்கள் மற்றும் படிகளுக்காக ரூபா 436,406,523 அல்லது 24 சதவீதம் அதனுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிறுவனத்தை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோளாகிய தொலைத்தொடர்பினை ஒழுங்குபடுத்துவதற்காக மொத்த செலவில் ரூபா 209,596,429 அல்லது 03 சதவீதம் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ஆணைக்குழு தீர்மானத்திற்கு இணங்க கொழும்பு தாமரைக் கோபுரத்தினை | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ கம்பனியிடமிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | வணிகமயப்படுத்தும் நடவடிக்கைக்காக ஒப்பந்த பதவியணியினர் படிகள் மற்றும் தொலைபேசி கட்டணங்களாக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் முறையே ரூபா 27,763,292 மற்றும் ரூபா 2,106,560 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்தும் கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியிடமிருந்து அப்பணம் 2023 யூன் 30 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | அறவிட வேண்டிய பணம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 1999 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது ஹந்தான ஒலி அலை அதிர்வு பரீட்சிப்பு நிலையம் அமைந்துள்ள 6.21 பேச்சர்ஸ் காணியின் உரிமையை பெறுப்பேற்பதற்காக அதன் மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 345,502 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தும் அதன் உரிமையை மீளாய்வாண்டின் இறுதிவரை பொறுப்பேற்றிருக்கவில்லை.<br>மேலும் தலைமை அலுவலகம் மற்றும் கொக்காவில் பல்நோக்கு நிலையம் அமைந்துள்ள காணிகளின் உரித்து உறுதிஃகுத்தகை உடன்படிக்கை மீளாய்வாண்டின் இறுதிவரையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அதன் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க வதிவிட குறிக்கோளிற்குப் புறம்பாக காணியை மாற்றல் உறுதியின் அடிப்படையில் வழங்க முடியாது என 2022 செப்தெம்பர் 01 ஆந் திகதி தெரியப்படுத்தியிருந்ததுடன் அதற்கிணங்க ஹந்தானை ஒலி அலை அதிர்வு பரீட்சிப்பு நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமையை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உரிய காணித்துண்டுகளுக்காக செலுத்திய பணத்தை காணியை ஒப்படைத்த திகதியிலிருந்து இன்று வரை நிலுவையான வரிப்பணத்திற்கு எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என | சொத்துக்களின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியை விசேட மானிய பத்திரத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தொழில்நுட்ப விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அந்த அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பித்தல் அவசியமற்றது என தெரிவிக்கப்பட்டது. கொகாவில் பல்நோக்கு ஒலிபரப்பு நிலையம் அமைந்துள்ள காணியின் சட்டரீதியான உரிமையாண்மையினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய பிரதேச செயலகம் மற்றும் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பணிக்கொடையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 117,674,290 பணத்தில் ரூபா 72,420,000 பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தும் மிகுதியான ரூபா 45,254,290 பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. அடுத்துவரும் நிதி ஆண்டின் போது ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படும் என | ஊழியர் பணிக்கொடையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயவாக தெரிவிக்கிறேன். | |
| (ஈ) | அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொண்ட தொழில்சார் நிறுவனங்களிடமிருந்து அங்கத்துவப் பணத்தை செலுத்துமாறு தெரிவித்து எழுத்துமூல வேண்டுதல் மற்றும் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கு உரிய தொழில்சார் நிறுவனங்களிடமிருந்து உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுக்கள் இல்லாதிருந்தும் மீளாய்வாண்டின் போது 27 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 452,647 பணம் அங்கத்துவ பணமாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. | இதன் பின்னர் அங்கத்துவ கட்டணத்தை செலுத்துமாறு உரிய தொழில்சார் நிறுவனங்களிடமிருந்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தெரியப்படுத்தல் கடிதத்தினை மீளளிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டிய கண்டிப்பான ஆவணமாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | அங்கத்துவப் பணத்தை செலுத்துவதற்கு தொழில்சார் நிறுவனங்களினால் அனுப்பிய கடித்தினை சமர்ப்பிக்க வேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |

## 3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **ஹம்பாந்தோட்டை கதவல் தொழில்நுட்ப பூங்காவில் தொலைத்தொடர்பு மத்திய நிலையத்தை நிர்மாணித்தல்** | | | |
| | (i) | இந்த நிர்மாணத்திற்காக ஆணைக்குழு மற்றும் ஒப்பந்தக்காரருடன் 2014 யூலை 28 ஆந் தகிதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையானது ஆணைக்குழுவினால் முதலீட்டுச் சபை மற்றும் சனாதிபதி செயலாளர் அலுவலகத்தின் ஆலோசனையின் அடிப்படையில் 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. அத்தீர்மானத்திற்கு எதிராக ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு இணங்க ஒப்பந்தக்காரரிற்கு இழப்பீட்டினை உள்ளடக்கி முழுமையான நியாயத்தீர்ப்புச் செலவாக | அவதானிப்பு சரியானதாகும். | நிர்மாணங்களை திட்டமிடுவதற்கு முன்னர் உரிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 426,897,598 பணம் ஆகைக்குழுவினால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | ஒப்பந்தத்தை பூர்த்திசெய்த திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 33 சதவீதமாக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 711,608,769 தொகை விளைவற்ற செலவாக இருந்ததுடன் அது நிதிநிலைமை கூற்றில் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதாகும். | கணக்கீட்டு குறைபாட்டினை சரிசெய்தல் வேண்டும். |

**3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **கிராமத்திற்கு தொடர்பாடல் தேசிய செயற்திட்டம்**<br>‘‘கிராமத்திற்கு தொடர்பாடல்’’ தேசிய செயற்திட்டத்திற்காக 04 செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிகளையும் 15 செயற்திட்ட உதவியாளர் பதவிகளையும் சேர்த்துக்கொள்வதற்காக 2021 நவம்பர் 05 ஆந் திகதி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. மேற்கூறிய பதவிகளுக்காக முறையே 204 விண்ணப்பப் பத்திரங்களும் 271 விண்ணப்பப்பத்திரங்களுமாக 475 விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்திருந்ததுடன் ரூபா 975,000 செலவு செய்து தெரிவுசெய்யும் பரீட்சை 2022 யூன் 22 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய பதவிகனளுக்காக 40 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை முறையே 66 மற்றும் 74 ஆக இருந்தும் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு 2023 யூன் 30 ஆந் திகதி வரை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் | இணங்கிக் கொள்கிறோம். | ‘‘கிராமத்துக்கு தொடர்பாடல்’’ தேசிய செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிராமத்திற்கு தொடர்பாடல் செயற்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகளையும் சொத்துக்களையும் தனியாக இனங்காணக்கூடிய வகையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) கதிரான ஒலி அலை அதிர்வு பரீட்சிப்பு நிலையத்தின் கட்டிடங்களை திருத்தம் செய்தலும் மீளமைப்புச் செய்தலும்** | | |
| (i) இச்செயற்பாட்டிற்காக பெறுமதி செர் வரியின்றி ரூபா 139,882,281 பெறுமதிக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு 2019 சனவரி 31 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அளவீட்டுப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாத முரண்பாடுகள் மற்றும் மேலதிக வேலைகளுக்காக ரூபா 24,360,085 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானது | மதிப்பீடு முறைப்படியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) மேற்கூறிய ஒப்பந்தம் 2019 நவம்பர் 11 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2023 யூன் 30 ஆந் திகதி வரையும் ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டிருக்காதது டன் ஒப்பந்த காலத்தை நீடித்தலும் மேற்டுிகாள்ளப்பட்டிருக்கவி ல்லை. | அவதானிப்பு சரியானது | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஆணைக்குழுவின் பிரதான கட்டிட நீடிப்பினை நிர்மாணித்தல்** | | |
| ரூபா 209,093,034 ஒப்பந்த பெறுமதியான நிர்மாணத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் புதிய கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 பெப்ரவரி 15 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 யூன் 30 ஆந் திகதி வரையும் நிர்மாணம் | இச்செயற்திட்டத்திற்னு கு அமைச்சரவை அங்கீகாரம் அவசியமானது என தீர்மானிக்கப்பட்டதனால் அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு வரிசை அமைச்சிற்கு | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடிவடைந்திருக்கவில்லை. மேலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் எந்த பௌதீக செயல் முன்னேற்றமும் காணப்படவில்லை. 2019 யூன் 10 ஆந் திகதி ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக மொறட்டுவை பல்கலைகழத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ஆலோசனை சேவைக் கட்டணங்களில் 70 சதவீதம் அதாவது ரூபா 7,318,256 மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | தேவையான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (இ) ஆணைக்குழுவின் தலைமை அலுவலக கட்டிடத்தினை திருத்தம் செய்யும் ஒப்பந்தத்தின் அளவீட்டுப் பத்திரம், மதிப்பீடு என்பவற்றினைத் தயாரிக்கும் செயற்பாட்டிற்கான ஆலோசனைக் கட்டணமாக 2015 சனவரி 25 ஆந் தகிதி மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ரூபா 10,057,910 செலுத்தப்பட்டிருந்ததுடன் அச்செலவு நடைமுறை வேலைக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2022 யூன் 30 ஆந் திகதி வரை கட்டிடத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ) வலையமைப்பு பிரிவிற்கான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல், பொருத்துதல் அமுல்ப்படுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்துதல் என்பவற்றிற்கான பெறுகைகள்** | | |
| (i) தேசிய போட்டி முறைமையின் கீழ் ரூபா 6,450,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 03 தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தும் ரூபா 1,047,000 | இதில் குறிப்பிடப்பட்டுள்ள 03 உபகரண வகைகளில் ஒரு உபகரணத்திற்காக ஒரு நிறுவனம் மாத்திரம் விலை மனுக்களைச் சமர்ப்பித்திருந்தும் தொழில்நுட்ப | தேவைப்பாட்டினை முறையாக இனங்காணுதல் வேண்டும். |

தொகைக்கு தொழில்நுட்ப உபகரணமாகிய 03 க்லெம் ஒன் அர்த் டெஸ்டர் மாத்திரம் ஒரு தனியார் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஏனைய தொழில்நுட்ப உபகரணங்களின் தேவைப்பாடு இருக்கவில்லையா என்பதுவும் அந்த உபகரணம் இல்லாமையால் உரிய செயற்பாட்டினை நிறைவேற்றும் வினைத்திறன் தொடர்பாகவும் கணக்காய்விற்கு பிரச்சினைக்குரியதாகும்.

குழுவினால் அக்கேள்வி மனு தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பெறுகை குழுவினால் இந்த உபகரணங்களுக்காக மீண்டும் விலை மனுக்களை கோருவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் உருவாகிய கொவிட் -19 தொற்றுநோயின் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்கு இணங்க பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. அந்த ஆண்டில் மீண்டும் விலை மனுக்களை கோருவதற்கு காலம் போதியதாக இல்லாததுடன் 2022 ஆம் ஆண்டிற்காக இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இங்கே குறிப்பிடப்பட்ட இன்னும் ஒரு உபகரணத்தை வழங்குவதற்காக ஒரு நிறுவனம் மாத்திரம் விலை மனுவினை சமர்ப்பித்திருந்தது. அந்த நிறுவனத்திடமிருந்து இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழு சிபாரிசு செய்திருந்த போதிலும் அந்த நிறுவனத்துடன்

| | | | |
|---|---|---|---|
| | | ஆணைக்குழு மேற்கொண்ட ஏனைய பராமரிப்பு உடன்படிக்கை சம்பந்தமாக உருவாகிய சிக்கல் காரணமாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனால் மேற்கூறிய உபகரணங்கள் சம்பந்தமாக கேள்வியினை வழங்குதல் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்படாமையும் இந்தியாவில் அமைந்துள்ள உரிய உபகரணங்களின் வலய முகவர் நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்வதற்கு உள்ள இயலுமையினை விசாரித்து பார்ப்பதற்கு சிரேஷ்ட பெறுகைக்குழு தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க உரிய நிறுவனத்திடமிருந்து இது தொடர்பாக விசாரித்தும் அதற்காக பதில் கிடைத்திருக்கவில்லை. | |
| (ii) | 03 மீட்டர் டவர் ஹயிட் மேசரிங் லேசரிற்காக ஒரு நிறுவனம் மாத்திரம் கேள்வி மனுவினைச் சமர்ப்பித்திருந்ததனால் மீண்டும் கேள்வியினைக் கோருவதற்கும் 02 ரேடியேசன் மீற்றர் அன்டனாக்களுக்கான கேள்வி மனுவினை ஒரு நிறுவனம் மாத்திரம் சமர்ப்பித்திருந்ததனால் அதற்காக இந்தியாவின் பிராந்திய முகவர் நிறுவனத்தின் மூலம் நேரடியாக கொள்வனவு | இந்தியாவில் அமைந்துள்ள பிராந்திய முகவர் நிறுவனத்திடம் விசாரித்திருந்தும் அதற்காக இதுவரை பதில் வழங்கப்படவில்லை. ஆணைக்குழுவினால் ரொடெக்ஸ் தனியார் கம்பனிக்கு 2022 சனவரி 24 ஆந் திகதி கேள்வி வழங்கப்பட்டிருந்தும் கேள்வி நிபந்தனைகளுக்கு | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கும் ஏனைய உள்நாட்டு முகவர்கள் உள்ளார்களா என்பதனை ஆராய்ந்து பார்த்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பெறுகைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் பெறுகைக்குழு அந்த ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் 2022 ஏப்ரல் 02 ஆந் திகதியிலிருந்து 04 வாரங்களுக்குள் உரிய உபகரணங்களை பொருத்துதல் இடம்பெற வேண்டிய போதிலும் 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பொருத்தப்பட்டிருந்தது. | இணங்க 04 வாரங்களுக்குள் அந்த உபகரணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அக்கால எல்லைக்குள் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஏற்றுமதிகளை மட்டுப்படுத்துதல் மற்றும் வங்கிகளின் மூலம் வெளிநாட்டு கொள்வனவுகளுக்காக டொலர் வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக மேற்கூறிய நிறுவனத்தினால் இப்பொருட்களை வழங்குதல் தாமதமடைந்துள்ளது. | |
| **(உ)** | **II ஐ.பீ.எம் சேவர்களுக்காக வருடாந்த பராமரிப்பு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் பெறுகை** | | |
| (i) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் பிணையானது 2022 ஏப்ரல் 27 ஆந் திகதியிலிருந்து 2022 யூன் 27 ஆந் திகதி வரை செல்லுபடியானதாக இருக்க வேண்டிய போதிலும் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயலாற்றல் பிணை முறியானது 2022 மே 27 ஆந் திகதி வரை மாத்திரம் செல்லுபடியானதாக இருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்தும் போது ஏற்றுக்கொள்ளல் கடிதத்தினை | 2022 ஆம் ஆண்டின் மார்ச் மாத்திலிருந்து யூன் மாதம் வரை நாட்டில் காணப்பட்ட போக்குவரத்து மற்றும் எரிபொருள் சிக்கலின் காரணமாக நிறுவன | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9 வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்குவதனோடு முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடுதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2022 ஏப்ரல் 07 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளல் கடிதத்தினை வழங்கி 2022 யூன் 21 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடப்பட்டிருந்தது. | நடவடிக்கைகளானது Roaster முறைமையில் அமுல்ப்படுத்தப்பட்டதன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட திகதியில் உடன்படிக்கையில் கையொப்பமிட முடியாதிருந்தது. தற்பொழுது நாடு வழக்கமான நிலைமைக்கு மாறியுள்ளதனால் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டம்** | | |
| (i) இந்த நிர்மாண ஒப்பந்தத்திற்காக நிதியை வழங்குவதற்கு 2012 செப்தெம்ர் 17 ஆந் திகதி ஆணைக்குழுவினால் சீனா எக்சிம் வங்கியுடன் மேற்கொண்ட கடன் உடன்படிக்கைக்கு இணங்க ஒப்பந்த பெறுமதியில் 85 தசவீதம் அதாவது அமெரிக்க டொலர் 88.655 மில்லியனை மாத்திரம் வழங்குவதற்கு இணங்கிக் கொண்டிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதியளவில் கடன் பணத்தைப் பெற்று முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தத்திற்குரிய கால அட்டவணைக்கு இணங்க நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்படாமையின் | அவதானிப்பு சரியானது | ஒப்பந்தத்தினை உரிய கால அட்டவணைக்கு இணங்க நிர்மாணித்தல் மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக முழுமையான கடன் பணத்தை நிர்ணயிக்கப்பட்டவாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் உரிய காலத்தின் போது அமெரிக்க டொலர் 67.260 மில்லியன் அதாவது கடன் பணத்தில் 76 சதவீதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ii) | கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் 18.4 ஆம் பிரிவின் பிரகாரம் செல்லுபடியாகும் செயலாற்றல் பிணைமுறி, பிடித்துவைத்தல் சான்றிதழ், தொழில்சார் இழப்பீட்டுக் காப்புறுதி என்பவற்றினை சமர்ப்பிப்பதற்கு சைனா நெசனல் இலெக்ரோனிக்ஸ் இம்போர்ட் என்ட் எக்ஸ்போர்ட் கம்பனி தவறியிருந்தது. உடன்படிக்கையின் 18.4 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றும் வரை திரவத்தன்மை சேதமாக கழித்துள்ள அமெரிக்க டொலர் 10.43 மில்லியன் பணம் மற்றும் செம்மையாக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதியின் மிகுதிப் பணமாகிய அமெரிக்க டொலர் 4.115 மில்லியன் பணத்தை நிறுத்திவைத்தல் மேற்கொள்ளப்பட்டது. | அவதானிப்பு சரியானது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | செயற்திட்டத்தின் வருமானத்திலிருந்து கடன் தவணைப் பணத்தினை செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 12,762 | சாத்தியவள ஆய்வு அறிக்கைக்கு இணங்க தொலைத்தொடர்பு மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகளிலிருநதும் வருமானத்தை உழைத்தல் வேண்டும். | செயற்திட்டத்தின் வருமானத்திலிருந்து கடன் தவணைப் பணத்தினை செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் கடன் தவணைப் பணமும் வட்டியும் ஆணைக்குழுவின் பணத்திலிருந்து செலுத்தப்பட்டது. | எனினும் ஊடக அமைச்சு தொடக்கமாக தற்பொழுது ஆரம்பித்துள்ள டிஜிடல் ஒலிபரப்பு செயற்திட்டம் தாமதமடைந்ததனால் அந்த ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளிலிருந்து வருமானத்தினை உழைத்தல் இன்னும் தாமதமடைந்துள்ளது. டிஜிடல் தொலைக்காட்சி சேவைகளை ஆரம்பித்தல் தாமதமடைந்ததனால் பணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டிய ஏனைய டிஜிடல் தொலைக்காட்சி சேவைகளுக்காக அலைவரிசைகளை ஒதுக்கீடு செய்தல் மேலும் தாமதமடைந்துள்ளது. | |
| (iv) | கொழும்பு தாமரைக் கோபுர சமையலறையின் உபகரணங்களை பௌதீகரீதியாக பரீட்சித்த போது அமெரிக்க டொலர் 15,747 கிரயமான ஐஸ் கட்டி தயாரிக்கும் இயந்திரம் (S/N G 01423 B) செயற்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அமெரிக்க டொலர் 100,744 கிரயமான 32 விடயங்கள் பற்றாக்குறையாக இருந்தன. | தற்பொழுது ஒப்பந்தக்காரர் செயற்திட்டத்தின் பொறியியலாளரான மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு சமையலறை உபகரணங்கள் தொடர்பான வரைபு வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட சமையலறை உபகரண பட்டியலுடன் ஒப்பீடு செய்தல் செயற்திட்டத்தின் பொறியியலாளரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் பொறியியலாளரான | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மொறட்டுவை பல்கலைக்கழகம் அதனை சான்றுபடுத்தியதன் பின்னர் தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (v) | 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இணங்க தொலைக்காட்சி தொலைத்தொடர்பு மற்றும் ஒலிபரப்புச் சேவை நடவடிக்கைகளுக்காக கோபுரங்களை ஈடுபடுத்துதல் தொடக்க குறிக்கோளாக இருந்ததுடன் அந்த நடவடிக்கை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 2022 அபெப்பரவரி 24 ஆந் தககிய 2K22-286-06(1) ஆம் இலக்க ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து உபகரணங்கள் மற்றும் முறைமைகளின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளல் கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் பொறுப்பு என குறிப்படப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதியிலிருந்து 2022 மே 28 ஆந் திகதி வரையான 03 மாத காலத்திற்காக ஆணைக்குழுவினால் பராமரிப்பு நடவடிக்கைகள் ஒப்பந்த கம்பனியான சீ.ஈஐ.ஈ.சீ கம்பனியால் நிரறைவேற்றப்பட்டிருந்தும் 2023 மார்ச் 02 ஆந் தகிதி வரை பராமரிப்பு | இது தொடர்பாக தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனிக்கு ஞாபகப்படுத்தல் அனுப்பிவைக்கப்பட்டது பராமரிப்பு உடன்படிக்கை கிடைத்ததன் பின்னர் அவற்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். | கொழும்பு தாமரைக் கோபுரம் ஆணைக்குழுவின் ஒரு சொத்து என்பதனால் அதன் பராமரிப்பு நடவடிக்கைக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (vii) | கொழும்பு தாமரைக் கோபுர ஆணைக்குழுவினால் பொறுப்பேற்பதற்கு ஆணைக்குழுவிற்காக மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,500,000 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செயற்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் அந்த உடன்படிக்கை செய்த பணத்தினை மிகைத்து ரூபா 9,234,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதாகும். உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்திசெய்தல் வேண்டும். |
| (viii) | கொழும்பு தாமரைக் கோபுரம் செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்திய ஆலோசனைக் கட்டணம் ரூபா 336.4 மில்லியனாக இருந்ததுடன் உடன்படிக்கை செய்த பெறுமதியினை மிகைத்து செலுத்திய பணம் ரூபா 137.7 மில்லியனாகும். | ஒப்பந்தக்காரர் அடிக்கடி வழங்கிய செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தும் இலக்குகளுக்கு இணங்க செயற்திட்டத்தின் பொறியியலாளரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வழங்கிய காலம் நீடிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது செயற்திட்டம் முடிவடைந்துள்ளதுடன் உரிய செலவுகளை மதிப்பீடு செய்து அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டின் அமைச்சரவையின் | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகாரத்தின் பிரகாரம் அமெரிக்க டொலர் 02 மில்லியன் ஆலோசனைக் கட்டணத்தையும் ஏனைய உரிய செலவுகளையும் கொடுப்பனவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ix) | கொழும்பு தாமரைக் கோபுரத்தினை வணிகமயப்படுத்தும் நடவடிக்கைக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்ததுக்கொள்ளப்பட்ட ஆலோசகருக்கு 2020 பெபர்வரி மாதத்திலிருந்து 2022 பெப்ரவரி மாதம் வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 5,227,613 செலுத்தப்பட்டிருந்தும் 2020 மே மற்றும் 2020 யூன் ஆகிய 02 மாதங்களுக்கு மாத்திரம் மாதாந்த அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. குறித்த பணிக்கான அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 05 ஆலோசக உதவியாளர்களின் மாதாந்த அறிக்கையினை கவனித்துப் பார்க்காது சம்பளங்களும் படிகளுமாக ரூபா 26,403,419 செலுத்தப்பட்டிருந்தது. | பந்திக்குரிய பதில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஆலோசகரின் மற்றும் ஆலோசக உதவியாளர்களின் மாதாந்த அறிக்கையும் வருகை மற்றும் வெளிச்செல்லலின் மாதாந்த அறிக்கையும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த ஊழியர்களின் எண்ணிக்கை 288 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 214 ஆகும். அதற்கிணங்க மொத்த | சுற்றறிக்கை மற்றும் ஆலோசனைகளின் மூலம் அடிக்கடி மட்டுப்படுத்தப்பட்டதனால் ஆட்சேர்ப்பினை பூரணப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வெற்றிடங்களின் எண்ணிக்கை 77 ஆகும். இதில் உள்ளடக்கப்பட்ட மேலதிக/ பிரதி பணிப்பாளர் நாயகம், மேலதிக/ பிரதி பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான 32 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீரித்த ஊழியர் எண்ணிக்கையினை திருத்தம் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே நிரந்தர ஊழியர் எண்ணிக்கையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் முறையே 08 உத்தியோகத்தர்கள் மற்றும் 02 உத்தியோகத்தர்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் தொழில்நுட்ப தன்மையான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்க 19 உதவி பணிப்பாளர் பதவிகள், ஆணைக்குழு செயலாளர் பதவி, 07 தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் பதவிகள், 11 சாரதி பதவிகள் என்பவற்றிற்காக ஆட்சேர்ப்பு பதவிகள் என்பவற்றிற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 02 கணக்காய்வு உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினை உருவாக்கும் ஒரு வகையான தற்காலிக அடிப்படையின் கீழ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக்குழுவிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 23 அலுவலக யெற்பாட்டு உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் ஆணைக்குழுவினால் 26 அலுவலக செயற்பாட்டு உதவியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | தொலைத்தொடர்புகள் அதிகாரச் ச்ட்டத்தின் 22(இ)(1)(அ) பிரிவின் மூலம் ஆணைக்குழுவின் பதவியினைத் தீர்மானிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஆணைக்குழுவினால் 30 அலுவலக உதவியாளர்களைக் கொண்ட பதவியணியனர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அதற்கிணங்க அங்கீகரித்த பதவியணியனரை மிகைத்து ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. | பணிப்பாளர் சபை தீர்மானித்த பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | ஆணைக்குழுவினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமற்ற ஒரு பதவியான உதவி கணக்காளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் ஒரு உதவி கணக்காளர் நியமிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,130,575 லெுத்தப்பட்டது. | புதிய ஆட்சேர்ப்புக்களை நடைமுறைப்படுத்தும் போது இந்த உத்தியோகத்தர் அங்கீகரித்த பதவியணியிலுள்ள ஒரு பதவிக்கு உள்ளீர்க்கப்படும் இயலுமை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த பதவியணியனர் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீரமின்றி ஆணைக்குழுவினால் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் பதவிகளின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 03 இனால் அதிகரிப்பு செய்யப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவினால் பதவியணியினை தீர்மானிப்பதற்காக தொலைத் தொடர்பு அதிகாரச் சட்டத்தின் 22(இ)(1)(அ) பிரிவின் மூலம் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானித்த மேலதிக பதவியணியினரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு மாத்திரம் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும் |
| (உ) | மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்ட சேவைத் தரத்திலுள்ள 08 பதவிகளுக்கான 09 வெற்றிடங்கள் 02 | மேலே (அ) பந்திக்காக வழங்கிய பதில் இதற்கு தொடர்புபட்டதாகும். | வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகள் வரையான கால வீச்சில் வெற்றிடமாகக் காணப்பட்டது. | | எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஒரு அரசாங்க நிறுவனத்திற்கு ரூபா 2,992,332 பணம் செலுத்தி ஆட்சேர்ப்பு நடைமுறை, தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை, செயலாற்றல் மதிப்பீட்டு முறைமை, சம்பள கட்டமைப்பு என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டு நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தும் அதனை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு 2023 யூன் 30 ஆந் தகிதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை. | புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பாக ஆய்வு செயற்பட்டு வருகின்றது அதன் பின்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (எ) | 2022 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் II (தொழில்நுட்பமற்றது) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட 04 உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக செயற்பாட்டு உதவியாளர்களின் பரீட்சை சான்றிதழ்கள் உரிய நிறுவனங்களிடம் பரீட்சிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | இப்பரீட்சை சான்றிதழ்களை பரீட்சிப்பதற்காக உரிய பணமும் செலுத்தப்பட்டு 2023 பெப்ரவரி 16 ஆந் திகதி பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | உரிய நிறுவனங்களிடமிருந்து பரீட்சை சான்றிதழ் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஏ) | 2016 யூலை 01 ஆந் திகதியிலிருந்து முகாமைத்துவ உதவியாளர் II தொழில்நுட்பமற்ற பதவிக்கு தற்காலிகமான அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் 2021 யூலை 01 ஆந் திகதி நிரந்தரமாக்கப்பட்டிருந்தும் உத்தியோகத்தருக்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகமை உள்ளதா என்பது உரிய நிறுவனங்களிடம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் (சா.தரம்) பரீட்சையில் 05 சிறப்பு சித்திகளுடன் 07 பாடங்களில் சித்திபெறப்பட்டிருந்தது. | உரிய நிறுவனங்களிடமிருந்து பரீட்சை சான்றிதழ் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 08 உத்தியோகத்தர்களுக்கு 25 சதவீத ஓய்வூதிய பங்களிப்பு பணமாக ரூபா 1,490,625 செலுத்தப்பட்டிருந்தது. அது ஆணைக்குழுவிற்கு மேலதிக | அந்த 25% படியானது அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்கான செலவாகும். ஆணைக்குழுவின் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற பதவிகளுக்குச் | ஆணைக்குழுவின் பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவுப் பொறுப்பாக இருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களை சேர்த்தக்கொள்ளும் போது ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஒவ்வொரு பதவிக்குமான தகமைகள் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு காணப்பட்டதா என்பது உரிய நிறுவனங்களிடமிருந்து பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | சமாந்தரமாகசொந்தமான அரசாங்க சேவையில் பதவி வகிக்கின்ற உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்கள். அந்த உத்தியோகத்தர்களை அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் தகமையானது ஆணைக்குழுவின் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட சேர்த்துக்கொள்ளும் தகமையானது ஆணைக்குழுவின் அங்கிகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட சேர்த்துக்கொள்ளும் தகமைக்கு சமமானதாகும். அது தொடர்பாக தனியாக கவனித்துப் பார்த்தல் அவசியமற்றதாக இருந்த போதிலும் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் போது சமர்ப்பிக்கப்படுகின்ற தரவுப் பத்திரங்களில் காட்டப்படுகின்ற உரிய தகமைகள் ஆணைக்குழுவின் அவதானிப்பிற்கு உட்படுத்தப்படும். | |
| (ஓ) | ஆணைக்குழுவின் நிருவாக மற்றும் மனிதவளங்கள் பிரிவின் உயர் முகாமைத்துவ மட்டத்திலுள்ள மூன்று உத்தியோகத்தர்களும் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் என்பதுடன் அந்த உத்தியோகத்தர்கள் | தற்காலிக அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேரத்துக் கொள்ளப்படுவதன் காரணமாக நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவின் நடவடிக்கைகள் | உயர் முகாமைத்துவ மட்டத்திலுள்ள பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்த்தக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிக்கடி சேவையிலிருந்து விலகுவதனால் நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவின் நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. அந்த பிரிவிற்கு பல ஆண்டுகளாக உயர் முகாமைத்துவ மட்டத்தின் பதவிகளுக்காக நிரந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தடைப்படவில்லை. அவ்வாறு தடைப்பட்டுள்ள நடவடிக்கை எது என்பாது சுட்டிக்காட்டப்படுமாகவிருந்தால் அது தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்க முடியும். | |
| (ஓ) | அரசாங்கத்தின் செய்தி திணைக்களத்தின் ஒரு முகாமைத்துவ உதவியாளரை தற்காலிக அடிப்படையில் ஆணைக்குழுவின் சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் போது அத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அசெ/ஆ03/02/02/005 ஆம் இலக்க 2021 நவம்பர் 23 ஆந் திகதிய கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் செய்தித் திணைக்களத்தின் போக்குவரத்:து பிரிவின் கடமைகளை மேற்கொண்ட காலப்பகுதியில் வாகனங்களை திருத்தம் செய்தல் மற்றும் வாகன கோவைகளை பேணும் போது மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் மற்றும் திணைக்கள தலைவரின் கட்டளையை அலட்சியம் செய்து செயற்படுதல் சம்பந்தமான புலனாய்வு இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும் ஆணைக்குழுவின் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் அது தொடர்பாக எதுவித கவனமும் செலுத்தாது ஒழுங்கீனத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். | அரசாங்க செய்தி திணைக்களத்தினால் ஆணைக்குழுவிற்க்கு எம்.எம். இரேசா சாமாலி என்பவரை விடுவிக்க முடியும் எனத் தெரிவித்து அனுப்பிவைக்கப்பட்ட 2021 யூன் 29 ஆந் திகதிய கடித்தில் இவ்வாறான புலனாய்வு தொடர்பாக குறிப்பிடப்படவில்லை. எனவே அந்த கடிதத்தில் வழங்கிய இணக்கப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நியமன அதிகாரியின் இணக்கப்பபாட்டின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டது. உத்தியோகத்தர் ஆணைக்குழுவிற்கு விடுவிப்பதனை அங்கீகரித்து உத்தியோகத்தரின் நியமன அதிகாரியும் ஒழுங்காற்று அதிகாரியுமான ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட 2021 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதமும் இவ்வாறான விடயத்தினை | தற்காலிக அடிப்படையில் ஆணைக்குழுவின் சேவைக்கு உத்தியோகத்தர்களை செர்த்தக்கொள்ளும் போது சேவையாற்றுகின்ற நிறுவனங்களிடமிருந்து அவர் தொடர்பாக விசாரித்துப் பார்த்தல் வேண்டும். |

குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு ஐய வினாவிற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள 2021 நவம்பர் 23 திகதிய அரசாங்க செய்தித் திணைக்களத்தின் கடிதத்தின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதானது மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள புலனாய்வு சம்பந்தப்பட்டதாகும். தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் 13.1 ஆம் பிரிவிற்கு இணங்கவும் ஆணைக்குழுவின் ஒக்காற்று விதித் தொகுதியின் 76 ஆம் பிரிவிற்கு இணங்கவும் தொடக்க புலனாய்வு என்ற விடயத்தினை ஆராய்ந்து பார்க்கும் பரீட்சிப்பானதுடன் அதன் மூலம் ஒரு உத்தியோகத்தர் குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுவதில்லை. தொடக்க புலனாய்வின் பின்னர் உத்தியோகத்தருக்கு எதிராக குற்றம் சுமர்த்தும் அளவுக்கு போதியளவு விடயம் இருக்கின்றது என அவரின் ஒக்காற்று அதிகாரிக்கு அவதானிப்பு காணப்படுமாகவிருந்தால் உடனடியாக முன்னைய பதவிக்கு அழைக்கும் அதிகாரம் அவரின் முன்னைய ஒக்காற்று அதிகாரிக்கு உள்ளது. இதுவரை அவ்வாறான நிலைமை தொடர்பாக

| | | | |
|---|---|---|---|
| | | ஒழுக்காற்று அதிகாரியினால் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ஔ) | 2002 செப்தெம்பர் 02 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் அலுவலக உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் 2009 செப்தெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து இலிகிதர் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டிருந்தார். சேர்த்துக்கொள்ளப்பட்டதிலிருந்து 05 ஆண்டுகளின் பின்னர் பரீட்சை சான்றிதழினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. பரீட்சை திணைக்களத்தினால் அச்சான்றிதழ் போலியான பெறுபேற்று பதிவு என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 1968 இன் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைகள் அதிகாரச்சட்டத்தின் கீழான நிறுவனங்கள் மற்றும் தண்டச் சட்ட கோவைக்கு இணங்க போலியான பெறுபேற்று குறிப்பினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலானது தண்டனை வழங்கக்கூடிய ஒரு குற்றம் எனவும் அதற்கிணங்க அவருக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுத்து அவருக்கு தெரிவித்து அனுப்புமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பரீட்சைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் 2002 செப்தெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரை செலுத்திய சம்பளங்களும் படிகளும் மற்றும் செலுத்திய மேலதிக பிரதிபலன்கள் எதனையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2012 செப்தெம்பர் 06 ஆந் திகதி ரூபா 59,640 | போலியான கல்விச் சான்றிதழினை சமர்ப்பித்ததன் காணரமாக இந்த உத்தியோகத்தர் 2K 13.PC.199F ஆம் இலக்க 2013 சனவரி 23 ஆந் திகதிய ஆணைக்குழு தீர்மானத்தின் மூலம் சேவையிலிருந்து நீக்கப்பட்டு அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

ஊழியர் பணிக்கொடைப் பணமும் செலுத்தி 2013 பெப்ரவரி 05 ஆந் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

**3.7 வாகன முறைமை முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **(அ) ஆணைக்குழுவின் வாகனங்களுக்கு முற்பணங்கள் மூலம் எரிபொருட்கள் வழங்குதல்** | | |
| (i) நாட்டில் எரிபொருள் சிக்கல் காணப்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழுவின் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்காக உதவிப் பணிப்பாளருக்கு (நிருவாகம்) ரூபா 200,000, ரூபா 300,000 ஆகிய அதிக பெறுமதியான முற்பணங்கள்வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் 27 வாகனங்களுக்கான முற்பணங்களில் ரூபா 388,965 எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அந்த எரிபொருள் வாகனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 07 வாகனங்களுக்கு வழங்கிய எரிபொருட்களின் அளவும் விலைப் பட்டியல்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவின் வாகங்களுக்கு கட்டளைகளின் மூலம் எரிபொருட்களை வழங்கிய நாவலை நிறுவனம் எரிபொருள் சிக்கலின் காரணமாக எரிபொருள் கட்டளைகளின் அடிப்படையில் வழங்குவதற்கு முடியாது என 2022 யூலை 06 ஆந் திகதி தெரியப்படுத்தியிருந்தது. காணப்பட்ட எரிபொருள் சிக்கலின் காரணமாக எந்த எரிபொருள் நிரப்பு நிலையமும் எரிபொருள் கட்டளையின் அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு இணங்கியிருக்கவில்லை. தொடர்ச்சியாக தொலைத்தொடர்பு சேவை வழங்கலினை நிலையாகப் பேணும் பொறுப்பு ஆணைக்குழுவின் பொறுப்பு என்பதனால் முற்பணங்களைப் பெற்று எரிபொருட்களை பெற்றுக்கொள்ளும் நடைமுறையினை அமுல்ப்படுத்த வேண்டி இருந்தது. அதற்கிணங்க வாகனங்களுக்கு தொடர்ச்சியாக எரிபொருட்களை வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மற்றும் சில வாகனங்கள் நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருந்து எரிபொருட்களை | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததனாலும் எரிபொருள் கிடைப்பதனை எரிபொருள் நிரப்பு நிலையம் முன்அறிந்து கொள்ள முடியாத நிலைமை இருந்ததனாலும் எரிபொருட்களை பெற்றுக்கொள்ளக்கூடியதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவும் அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருட்களை வழங்கக் கூடிய பெறுமதிக்கு போதியளவு முற்பணங்களை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. நிருவாக நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த பணிப்பாளருக்கு (நிருவாகம்) முற்பணங்கள் வழங்கப்பட்டன. எரிபொருள் அளவினை காட்டாதுள்ள விலைப்பட்டியல்களில் எரிபொருளை பெற்றுக்கொண்ட பணத்தின் பெறுமதி காட்டப்பட்டுள்ளது. ஓட்டக் குறிப்புக்களில் எரிபொருட்களின் அளவு காட்டப்படும். | |
| (ii) | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) 2022 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வாகனத்திற்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 21,500 தொகையான எரிபொருள் முற்பணத்தினை பெற்றுக்கொண்டிருந்ததுடன் அதனைத் தீர்த்து வைக்கும் போது 50 லீற்றர் டீசல் கொள்வனவு செய்யப்பட்டது எனடபதற்கான விலைப்பட்டியலை சமர்ப்பித்திருந்தும் வாகனத்திற்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருட்களின் அளவு 20 லீற்றர் டீசல்களாகும். | முற்பணங்களை வழங்கும் நடைமுறையின் காரணமாக ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் முற்பணத்தை பெற்றுக்கொண்டிருந்தும் எரிபொருளினைப் பெற்றுக்கொள்வதற்காக சாரதியுடன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகதர்தரே ஒப்படைக்கப்பட்டிருந்தார். எனவே இது சம்பந்தமாக பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 92 வாகனங்களுக்கான முற்பணங்களிலிருந்து ரூபா 1,335,693 தொகையான எரிபொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கொள்வனவு செய்த எரிபொருட்கள் உரிய வாகனங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டதா என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. 13 சந்தர்ப்பங்களில் வாகனங்களுக்கு வழங்கிய எரிபொருட்களின் அளவும் விலைப்பட்டியல்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய ஓட்ட அட்டவணைகளை அடுத்துவரும் காலங்களில் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாகனங்களை கைதவிர்ப்புச் செய்தல்** | | |
| (i) | கைதவிர்ப்பு மதிப்பீட்டுக் குழுவினால் 2020 யூலை 22 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது எனவும் தற்பொழுது வாகனங்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதனால் வாகனங்களின் விலைகள் அதிக பெறுமதியைக் கொண்டிருந்தது எனவும் அதன் காரணமாக புதிய மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் 04 வாகனங்கள் ரூபா 4,877,616 தொகைக்கு விற்கப்பட்டிருந்தது. | இக்காலத்தில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கல், எரிபொருள் பிரச்சினை, கொவிட் தொற்றுநோய் நிலைமை என்பவற்றின் காரணமாக அலுவலக பதவியணியினர் மட்டுப்படுத்தப்பட்டு அலுவலகங்களுக்கு அழைத்தல் முதலிய காரணங்களின் அடிப்படையில் ஏல விற்பனை நடவடிக்கைகளை மேற்அெகாள்வதற்கு இக்காலம் எடுத்திருந்தது. இவ்வாகனங்கள் பல ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது நிறுத்திவைக்கபட்டிருந்ததன் காரணமாக நாளுக்கு நாள் சேதமடைந்து வந்ததனால் மேலும் நட்டமடைவதனை தவிர்க்கும் நோக்கத்தில் 2020 யூலை 22 ஆந் திகதி மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு | மிகுதி வாகனங்களின் கைதவிர்பு நடவடிக்கைகளின் போது முறையான மதிப்பீட்டு அறிக்கை அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டியதுடன் முறையற்ற மதிப்பீட்டு அறிக்கையினை ஈடுபடுத்தி வாகன கைதவிர்ப்புக்களை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏல விற்பனை செய்யும் நடைமுறை முன்கொண்டு செல்லப்பட்டது. இந்த வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,010,000 ஆக இருந்ததுடன் ஏல விற்பனையின் போது இலாபமாக ரூபா 2,867,616 பணத்தை உழைக்க கூடியதாக இருந்தது. வாகனங்களின் விலை அதிகரித்துச் செல்லும் நலன் நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. | |
| (ii) | ஒரு வாகனத்திற்கு மதிப்பீட்டுப் பெறுமதிக்குச் சமமான அல்லது மிகையான பெறுமதியுடன் கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக மீண்டும் கேள்வி மனுவினைச் சமர்ப்பிக்கும் போது ரூபா 310,900 தொகையான கூடுதல் கேள்வி மனுக்களைக் கோருவதற்கு கைதவிர்ப்பு மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருந்தும் அந்த சிபாரிசு நடைமுறைப்படுத்தப்படாது கேள்வி மனுவினைச் சமர்ப்பித்த கேள்வி மனுதாரர் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 520,000 தொகைக்கு வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு விருப்பத்தினை தெரிவித்தனை காரணமாகக் காட்டி அந்த கேள்வி மனுதாரருக்கு மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வாகனம் விற்கப்பட்டிருந்தது. | அப்போது நாட்டில் காணப்பட்ட மட்டுப்படுத்தல் மற்றும் ஏல விற்பனை செய்யும் நடைமுறைக்காக கேள்வி மனுவினைக் கோருவதற்கு எடுக்கும் காலம், செலவுகள், சிக்கலான தன்மைகள் என்பவற்றை கவனத்திற்கு எடுத்து 2022 சனவரி 27 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்ட தீர்மானம் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் 227-8280 ஆம் இலக்க வாகனம் மதிப்பீட்டு பெறுமதிக்கு ஏலத்தில் விற்கப்பட்டது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (iii) | ஒரு வாகளனத்திற்கு இரண்டாவது கூடுதல் விலை சமர்ப்பித்த கேள்வி மனுதாரர் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 520,000 தொகைக்கு | 227-8280 ஆம் இலக்க வாகனத்தை மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வழங்குவதற்கு ஆணைக்குழு வழங்கிய அங்கீகாரத்தினைப் பின்பற்றி 227-8426 ஆம் இலக்க | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்க |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாக கேள்வி மனுவினைச் சமர்ப்பித்திருந்தும் அவரின் வேண்டுதல்களுககு இணங்க மதிப்பீட்டுப் பெறுமதிக்கு இந்த வாகனம் விற்கப்பட்டிருந்தது. | வாகனம் மதிப்பீட்டு பெறுமதிக்கு எலத்தில் விற்க்கப்பட்டிருந்தது. | ளிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (iv) | ஆணைக்குழுவினால் கேள்வி ஆவணங்களில் பெறுமதி சேர் வரியினை அறவீடு செய்வது தொடர்பாக காட்டியிருக்காததன் காரணமாக ஒரு வாகனத்தை ரூபா 1,200,000 தொகைக்கு கொள்வனவு செய்த கேள்விதாரர் பெறுமதி சேர் வரியினைச் செலுத்துவதனை நிராகரித்திருந்தார். அதன் காரணமாக மீளாய்வாண்டில் வருமானம் ரூபா 88,889 ஆல் குறைவடைந்திருந்ததுடன் கேள்வி ஆவணங்களை முறைப்படியாக தயாரிக்காத உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஆணைக்குழுவிற்கான நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தின் மதிப்பீட்டு விலையான ரூபா 520,000 இற்கு பெறுமதி சேர் வரி சேர்க்கப்பட்ட விலையாக இருந்த போதிலும் ரூபா 1,200,000 தொகைக்கு மேற்பட்ட கேள்விதாரர்களுக்கு கேள்வியினை வழங்குவதன் மூலம் 227-8430 ஆம் இலக்க வாகனத்தின் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு மிகையாக வாகனத்தை ஏலத்தில் விற்பதற்கு முடியுமாக இருந்தது. இரண்டாவது கேள்விதாரரின் கேள்வி மதிப்பீட்டு பெறுமதியினை விட குறைவடைந்ததனால் மீண்டும் கேள்வி மனுவினை கோருவதற்கு எடுக்கும் காலமும் செலவும் அதன் போது இந்த வாகனத்திற்கு இதனைவிட உயர்நத பெறுமதி கிடைக்கும் உறுதிப்பாடு இல்லாமையும் என்ற விடயத்தை கவனித்துப்பார்த்து இந்த வாகனம் அதிக தொகைக்கு ஏலத்தில் விற்க்கப்பட்டது. | கேள்வி ஆவணங்களை முறைப்படியாக தயாரிக்காத உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஆணைக்குழுவிற்கான நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 2015 யூலை 10 அந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வாகனங்களை கைதவிர்ப்புச் செய்யும் போது அனைத்து வருமானமும் திரண்டட நிதியத்திற்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் வாகன விற்பனையின் | 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 22"ஈ"(2)(ஈ) பிரிவின் பிரகாரம் இப்பணம் திரண்ட நிதியத்திற்கு அல்லாது ஆணைக்குழுவின் நிதியத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். | பதிலில் காட்டப்பட்டுள்ளவாறு அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்கப்படாததனால் 2015 யூலை 10 அந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| மூலம் கிடைத்த ரூபா 4,877,616 பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4. **கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

4.1 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது 10 செலவு விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட செலவினை மீகைத்து ரூபா 515,459,337 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது சதவீதமாக 13 சதவீதத்திலிருந்து 313 தசவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த வழமைக்கு மாற்றமான செலவு அதிகரிப்பதற்கு காரணமாவது,.<br>- 2022 பெப்ரவரி மாதத் திலிருந்து ரூபா 5,000 சம்பளம் அதிகரித்ததனால் ஏனைய படிகள் அதிகரித்தல்<br>- தற்காலிக அடிப்படையில் 2022 பெப்ரவரி மாத்திலிருந்து சேர்த:துக் கொள்ளப்பட்ட உதவிப் பணிப்பாளர் நிருவாகம் பதவிக்குரிய ஓய்வூதிய பங்களிப்பு பணம் அதிகரித்தல்<br>- ஓய்வுபெறும் வயது 2022 ஆம் ஆண்டின் போது 65 வயதிலிருந்து 60 வயது வரை குறைத்தலின் அடிப்படையில் ஊழியர்கள் ஓய்வு பெறுதல் அதிகரித்ததனால் பணிக்கொடை கொடுப்பனவு அதிகரித்தல்.<br>- ஆணைக்குழு தீர்மானத் தின் அடிப்படையில் கொழும்பு தாமரைக் கோபுர கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய காப்புறுதி பங்களிப்பு பணத்தினை ஆணைக்குழுவின் ஒரு செலவாகக் கருதி செலவு அதிகரித்தல் கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் கீழ் காணப்பட்ட சொத்துக்கள் 2022 ஆம் ஆண்டில் மூலதனமாக்கியதனால் | பாதீட்டினை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சொத்துக்கள் அதிகரித்ததன் மூலம் பெறுமானத் தேய்வு செய்தல் அதிகரித்தல். | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்படாத ஒழுங்குபடுத்தல் செலவுகளின் கீழ் உள்ள 03 செலவு விடயங்களுக்காக ரூபா 152,389,962 செலவும் தாபன மற்றும் நிருவாக செலவுகளின் கீழ் உள்ள 11 செலவுகளுக்காக ரூபா 514,696,496 செலவும் மிளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் குறிப்பு இலக்கம் 03, 09, 10 என்பவற்றிற்கு உங்களது கவனத்தை செலுத்துமாறு தயவாக வேண்டிக் கொள்கிறோம். | பாதீட்டு குறிப்பு இலக்கம் 03, 09, 10 என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |